1992 ஏப்ரல் 2]

திரு. ஜி. பழனிசாமி : இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

டாக்டர் தே. குமாரதாஸ் தன்னுடைய வெட்டுத் தீர்மானத்தை வலியுறுத்த விரும்புகிறாரா என அறிய விரும்புகிறேன். டாக்டர் தே. குமாரதாஸ் இருக்கையில் இல்லை. வெட்டுத் தீர்மானம் திரும்பப் பெறப்பட்டதாகக் கருதப்படுகிறது.

''கல்வி பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 15,17,77,87,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்.'' என்னும் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி) அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெற்றது.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்றன, பேரவை மீண்டும் நாளை (3—4—1992) காலை 9-30 மணிக்குக்கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 2–23 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

8. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

(அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்

50. எம். டி. எஸ். 7315 பதிவு எண் கொண்ட மோட்டார் வண்டிக்காக 1—4—1984 முதல் 31—5—1984 வரை செலுத்தப்பட வேண்டிய நிலுவை வரி மற்றும் தண்டத் தொகையை தள்ளுபடி செய்வது குறித்து உள் (போக்குவரத்து) துறையின் 6—1—1992 ஆம் நாளிட்ட 18 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (1974ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரிவிதிப்புச் சட்டத்தின் [தமிழ்நாடு சட்டம் 13/1974) 25(2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

51. தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தின் 1990–91 ஆம் ஆண்டிற்கான பதினான்காவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

52. தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனத்தின் 1990–91 ஆம் ஆண்டிற்கான இருபதாவது ஆண்டறிக்கை. [1956) ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்ட 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.

74. பொதுக் கணக்குக் குழுவின் முப்பத்தெட்டாவது அறிக்கை, 1991–92.

75. பொதுக் கணக்குக் குழுவின் முப்பத்தொன்பதாவது அறிக்கை, 1991-92.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS